# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),**
**நந்தனம், சென்னை- 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 10.07.2025**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 2850/விசாரணை/E/2023**

| | | |
|---|---|---|
| திரு கா.சக்திவேல் | . | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மதுரை வடக்கு வட்டம். மதுரை | .. | பொது அதிகார அமைப்பு |

******

## ஆணை

1) இவ்வாணையத்தின் 21.01.2025 நாளிட்ட உத்தரவில், மனுதாரர் தான் கோரிய விவரங்கள் குறித்து மீண்டும் ஒரு மனுவை மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்க வேண்டுமெனவும். அதன் அடிப்படையில், மனுதாரர் கோரும் தகவல்கள் பொது அதிகார அமைப்பில் கிடைக்கப்பெறாதபட்சத்தில் மனுதாரருக்கு அது குறித்து உறுதி பிரமாணப் பத்திரம் வழங்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தது.

2) இதற்கிடையில், மனுதாரர் இவ்வாணையத்திற்கு 03.05.2025 நாளிட்டு எழுதியுள்ள கடிதத்தில், இவ்வாணையத்தின் 21.01.2025 நாளிட்ட உத்தரவின்படி, தான் 11.03.2025 அன்று தனக்கு தேவைப்படும் தகவல் குறித்து தெளிவாக குறிப்பிட்டு மதுரை வடக்கு வட்டாட்சியருக்கு மனு அனுப்பியுள்ளதாகவும், அதற்கு இதுவரையில் எந்த பதிலும் அனுப்பப்படவில்லை என்றும் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார்.

3) அதனை தொடர்ந்து, இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர்/ மதுரை வடக்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு வீ.சுந்தரவேல் 15.05.2025 அன்று இவ்வாணையத்தில் ஆஜராகி, மனுதாரர் 11.03.2025 அன்று அனுப்பியுள்ள மனுவில் கோரியுள்ள தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறாத காரணத்தால், அவருக்கு 13.05.2025 அன்று உறுதி பிரமாணப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகலையும், மனுதாரர் அதை பெற்றுக் கொண்டதற்கு தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள 14.05.2025 நாளிட்ட பதிவின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

ஆகவே, இந்த மேல்முறையீட்டு மனு மீது மேல்நடவடிக்கை எதுவும் தேவையில்லையென கருதி, இவ்வழக்கை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். S.A 2850/விசாரணை/E/2022</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை வடக்கு வட்டம், மதுரை

திரு கா.சக்திவேல்,
க.எண்.16, இ.எஸ்.ஐ மருந்தக அரசு குடியிருப்பு,
இ.எஸ்.ஐ மருந்தக வளாகம், பழங்காநத்தம்,
மதுரை -3

Copy to: File
CR/PA